| | | | | | |
|---|---|---|---|---|---|
| வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 15/06/2024 | முதல் | 19/06/2024 |
| அறிக்கை எண் : | 048/ 2024 | வெளியீட்டு நாள் : | 14/06/2024 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (09.06.2024 **முதல்** 13.06.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-06-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/06 | 10/06 | 11/06 | 12/06 | 13/06 | **தேதி** | **நாள்-1** 15/06 | **நாள்-2** 16/06 | **நாள்-3** 17/06 | **நாள்-4** 18/06 | **நாள்-5** 19/06 |
| 0.8 | 2.4 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 3 | 0 | 7 | 5 |
| 35 | 37 | 39 | 38 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 37 | 38 | 37 | 37 |
| 25 | 26 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 26 | 25 | 25 |
| 4 | 3 | 4 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 6 | 6 | 5 |
| 78 | 66 | 64 | 76 | 69 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 53 | 54 | 48 | 57 | 46 | | 40 | 40 | 40 | 50 | 40 |
| 10 | 7 | 9 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 10 | 8 | 10 | 10 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | **மேற்கு** | **மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **மேற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 16, 18 மற்றும் 19 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (14 - 27 ஜூன் 2024):**

## மழைப்பொழிவு :

14-06-2024 - 20-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டியே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கொடிவகை பயிர், பாகற்காய், கால்நடை.**

**கொடிவகை பயிர்:**

அதிக ஈரப்பதமான வானிலை காரணமாக, கொடிவகை காய்கறி பயிர்களில் சாம்பல் நோய் தாக்குதல் பரவலாக ஏற்பட வாய்ப்பு உள்ளது.

சாம்பல் நோய் குறிப்பாக அதிகஈரப்பதம், மிதமான வெப்பநிலை மற்றும் நெரிசலான, நிழலான, மோசமாக காற்றோட்டமான இடங்களில் காணப்படுகிறது.

இதனைகட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் டைனோகாப் அல்லது 0.5 கிராம் என்ற அளவில் கார்பென்டாசிம் தெளிக்கவும்.

**பாகற்காய்:**

பாகற்காய் பயிரில் தத்துப் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படலாம்.

இதனைக்கட்டுப்படுத்த 10லி தண்ணீருக்கு 40கிராம் சூடோமோனாஸ், 300மி நன்கு புளித்த தயிர் இவற்றுடன் 20மி கோழி முட்டையின் வெள்ளைக்கரு சேர்த்து கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

கால் நடைவளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு இந்த தருணங்களில் தங்களின் மாடுகளை கோமாரி எனும் கால்கானை வாய்க்கானை நோய் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக பெரும் பொருளாதார சேதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளது

ஆகையால் ஜூன் மாதத்தில் அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகத்தை அணுகி தங்களது மாடுகளுக்கு கோமாரி எனப்படும் கால்கானை வாய்க்கானை நோய்க்கான தடுப்பூசியினை போட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய்த் தடுப்பூசியை தவறாமல் போட வேண்டும்.

.